# இனம்

இனம் இனத்தைச் சேரும்

ISSN : 2455 - 0531

Mail Id: inameditor@gmail.com
editor@inamtamil.com

UAN.TN03D0061112

## பன்னாட்டு இணையத் தமிழாய்விதழ்

## International E-Journal of Tamil Studies

இலக்கணம், இலக்கியம், கலை, பண்பாடு, அறிவியல், கணினிசார் ஆய்வை இனங்காண!

மலர்:5 இதழ்:20 பிப்ரவரி 2020 Vol.5 Issue :20 February 2020





மூ.பாலசுப்பிரமணியன் இரா.இந்து ஆ.மணி ரா.வனிதா

பி.அனுராதா மு.கயல்விழி சி.சாவித்ரி சே.முனியசாமி

Inam ISSN : 2455 - 0531
UAN.TN03D0061112

# இனம்

பன்னாட்டு இணையத் தமிழாய்விதழ்
International E-Journal of Tamil Studies

## பதிப்பாசிரியர்

முனைவர் மு.முனீஸ்மூர்த்தி
தமிழ் உதவிப்பேராசிரியர்
பிஷப் ஹீபர் கல்லூரி, திருச்சி - 17.

முனைவர் த.சத்தியராஜ்
தமிழ் உதவிப்பேராசிரியர்
ஸ்ரீகிருஷ்ணா ஆதித்யா கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர் - 42.

## ஆலோசனைக் குழு

முனைவர் செ.வை.சண்முகம் (சிதம்பரம்)
முனைவர் சு.இராசாராம் (நாகர்கோயில்)
முனைவர் சிலம்பு நா.செல்வராசு (புதுச்சேரி)
முனைவர் ந.வேலுச்சாமி (சேலம்)
திரு சு.ஸ்ரீகந்தராசா (ஆஸ்திரேலியா)

## ஆசிரியர் குழு

முனைவர் ஆ.மணி (புதுச்சேரி)
முனைவர் க.பாலாஜி (கோவை)
முனைவர் இரா.குணசீலன் (கோவை)
முனைவர் ந.இராஜேந்திரன் (கோவை)
முனைவர் இரா.இராஜா (திருச்சி)
முனைவர் ப.சிவமாருதி (தாய்லாந்து)
முனைவர் ச.முத்துச்செல்வம் (மதுரை)
முனைவர் சா.விஜய ராஜேஸ்வரி (தஞ்சாவூர்)
திருமிகு எப்.எச்.அகம்மது சிப்லி (இலங்கை)

இதழாக்கமும் வெளியீடும்
இனம் பதிப்பகம், கோவை
inameditor@gmail.com
www.inamtamil.com
9600370671, 9677821364

பிப்ரவரி 2020 மலர் : 5 இதழ் : 20
February 2020 Volume V Issue 20

## உள்ளே ...

### தமிழ்ச் செவ்வியல்

சங்க இலக்கியப் பதிவுகளில் மருத நில விளையாட்டுகள்
Marutham Land games in Sangam literature
முனைவர் மு.பாலசுப்பிரமணியன்/Dr.M.Balasubramanian | 4

திருக்குறளில் நிலவு மறைப்பு (சந்திர கிரகணம்)
Thirukuralil nilavu maraippu (sandirakiraganam)
முனைவர் இரா.இந்து/Dr.R.Indhu | 17

### பக்தி இலக்கியம்

திருமூலர் பற்றிய கதைகள் உணர்த்தும் உண்மைகள்
The Facts in behind of stories about Thirumular
முனைவர் ஆ.மணி/Dr.A.Mani | 24

### தற்கால இலக்கியம்

தூப்புக்காரி புதினத்தில் பண்பாடு - ஓர் ஆய்வு
CULTURE OF THUPUKKARI NOVEL
ரா.வனிதா /R.VANITHA | 30

வாஸந்தியின் நாவலில் மரபு உடைத்தலும் உரிமை பேணலும்
Vasnthi Navalil marapu udaithalum urimai penalum
பி.அனுராதா/P.Anurathan | 37

### வரலாறு - சமூகவியல் - புவியியல் - கல்வியியல்

சோழர்கால வடமொழிக் கல்லூரிகள்
SANSKRIT COLLEGES IN CHOLA PERIOD
மு.கயல்விழி/M.kayalvizhy | 48

தமிழ், தெலுங்கு நுட்பவியல் கலைச்சொற்களின் அமைப்பும் மொழித்தூய்மையும்
Structure and Language Purity of Technical Terminology in Tamil and Telugu
முனைவர் சி.சாவித்ரி/Dr.Ch.Savithri | 55

சர்வக்ஞர் பார்வையில் கடன் கொடுத்தலும் வாங்கலும்
(SARAVAJANAR PARVAIEL KADAN KODUTHTHALUM VANGALUM)
முனைவர் சே.முனியசாமி/Dr S.MUNIYASAMY | 66

...

# Chief Editors

**Dr.M.Muneesmoorthy**
*Assistant Professor in Tamil*
*Bishop Heber College, Trichy - 17.*
*moovendhan1887@gmail.com*

**Dr.T.Sathiyaraj**
*Assistant Professor in Tamil*
*Sri Krishna Adithya College of Arts and Science, Coimbatore - 42.*
*neyakkoo27@gmail.com*

# ADVISORY TEAM

**Dr.S.V.Shanmugam (Chidambaram)**
**Dr.S.Rajaram (Nagarkovil)**
**Dr.Silambu.N.Selvarasu (Pondichery)**
**Dr.N.Veluchamy (Salem)**
**Sri S.SriKantharasa (Australia)**

# Editorial Team

**Dr.A.Mani (Pondichery)**
manikurunthogai@gmail.com

**Dr.G.Balaji (Coimbatore)**
balajiand@gmail.com

**Dr.R.Gunaseelan (Coimbatore)**
gunathamizh@gmail.com

**Dr.N.Rajendran (Coimbatore)**
ilayavantamil@gmail.com

**Dr.R.Raja (Trichy)**
sengolan84@gmail.com

**Dr.B.Sivamaruthi (Thailand)**
sivasgene@gmail.com

**Dr.S.Muthuselvam (Madurai)**
muthuselvam8122@gmail.com

**Dr.S.Vijaya Rajeshwari (Thanjavur)**
76viji@gmail.com

**Thiru.F.H.Ahamed Shibly (Srilanka)**
shiblyfh@seu.ac.lk


...

மதிப்பிடப்பெற்றது

# சங்க இலக்கியப் பதிவுகளில் மருத நில விளையாட்டுகள்

## Marutham Land games in Sangam literature

முனைவர் மு.பாலசுப்பிரமணியன் / Dr. M.Balasubramanian[1]

**Abstract:** Many of the biological remnants left by the human race in evolution are still played as games. In particular, hunting and fighting have become a variety of games. Games have a close connection with human race history. This is due to the fact that games, like history, have undergone many changes over time. The Tamils are unique and historical in their play as part of their biological elements. Geographically analyzing the games played by Tamils during the Sangam Era, one can feel the geographical culture of Tamils. This article examines the games of the agriculture land people (Marutham) recorded by the Sangam literature.

**Keywords:** Sangam Era, Geographical Culture, Marutham Land, தமிழர் விளையாட்டுகள், மருத நிலம்.

பரிணாம வளர்ச்சியில் மனித இனம் கைவிட்ட வாழ்வியல் எச்சங்கள் பல இன்றும் விளையாட்டுக்களாக ஆடப்படுகின்றன. குறிப்பாக, வேட்டையாடுதலும், போரிடுதலும் பல்வேறு விளையாட்டுகளாகப் பரிமளித்துள்ளன. மனித இன வரலாற்றோடு விளையாட்டுகளுக்கு நெருங்கிய தொடர்பு உண்டு. வரலாற்றைப் போல விளையாட்டுக்களும் காலந்தோறும் பல மாற்றங்களை கண்டுள்ளமையால் இது விளங்கும். தமிழர் தம் வாழ்வியல் கூறுகளில் ஒன்றாக விளங்கும் அவர்களின் விளையாட்டுக்கள் தனித்துவமானவை என்பதோடு வரலாற்றுப்பூர்வமானவையாகவும் இருக்கின்றன. சங்க காலத்தில் தமிழர்களால் ஆடப்பட்ட விளையாட்டுக்களை நிலவியல் அடிப்படையில் ஆராய்ந்தால், தமிழர்களின் நிலவியல் பண்பாட்டுத் தொன்மையை உணரலாம். அந்தவகையில் சங்க இலக்கியங்கள் பதிவு செய்துள்ள மருத நில மக்களின் விளையாட்டுக்களை இக்கட்டுரை ஆராய்கின்றது.

### தமிழர் விளையாட்டுகள்

விளையாட்டு உடற்பயிற்சியை முன்னிலைப்படுத்தினாலும், மகிழ்ச்சியின் வெளிப்பாடாக ஆடப்படும் கலை வடிவமாகும். போரும் காதலும் நிறைந்திருந்த தமிழ்ச் சமூகத்தில் விளையாட்டு என்பது, இரண்டின் பொருட்டுமே ஆடப்

[1] இணைப் பேராசிரியர், தமிழியல்துறை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர். nellaibaalaa@gmail.com, 9488013050

மதிப்பிடப்பெற்றது

# திருக்குறளில் நிலவு மறைப்பு (சந்திர கிரகணம்)

## Thirukuralil nilavu maraippu (sandirakiraganam)

முனைவர் இரா.இந்து/Dr.R.Indhu[26]

**Abstract:** Lunar eclipse as gleaned in Thirukkural (kural : 1146) is highlighted with sangam literature verses. The scientific reason behind the lunar eclipse is also explained. The shadow planet raagu named as snake is also explained.

**கட்டுரைச் சுருக்கம்**

திருவள்ளுவரின் வானியல் சிந்தனையின் வெளிப்பாடாகச் சந்திர கிரகணத்தை உவமையாகக் குறிப்பிடப்பட்டுள்ள குறளை *(குறள் எண். 1146)* சங்க இலக்கிய எடுத்துக்காட்டுகளுடன் ராகு திங்களாகிய சந்திரனை மறைத்தல் பற்றி விரிவாக ஆய்வு செய்யப்பட்டுள்ளது. ராகு பற்றியும் நுண்ணாய்வு செய்யப்பட்டுள்ளது.

**குறிச்சொற்கள் (KEYWORDS):** அலர், உவமை, சந்திர கிரகணம், சங்க இலக்கியம், ராகு (பாம்பு).

**கருதுகோள்**

இயற்கையோடு இயைந்து வாழ்ந்த தமிழரின் வாழ்வியலைப் பற்றி எடுத்தியம்பும் இலக்கியங்களுள் ஒன்றான திருக்குறளில் தமிழரின் கூர்ந்தாயும் வானியல் நுட்பங்கள் காணப்படுகின்றன என்ற கருதுகோளை அடிப்படையாகக் கொண்டு இக்கட்டுரை அமைகிறது.

***

பண்டைத் தமிழரின் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் நீதி இலக்கியமான திருக்குறள் எம்மதத்தவருக்கும் எக்காலத்திற்கும் ஏற்ற பொதுமறையாக விளங்குகிறது. திருக்குறள் அறம், பொருள், இன்பம் ஆகிய உறுதிப்பொருள்கள் வழி இலக்கியம், இலக்கணம், சமயம், சட்டம், அரசியல், தனிமனித நலம், அறிவியல், வாழ்வியல், பொருளாதாரம் இப்படி அனைத்துத் துறைத் தகவல்களையும் உள்ளடக்கி களஞ்சியம் எனலாம். இவ்வளவு சிறப்புகள் பெற்ற திருக்குறளுக்குப் பல உரைகள், பதிப்புகள், மொழிபெயர்ப்புகள், அகராதிகள், நூல்கள், கட்டுரைகள், ஆய்வுகள் வெளிவந்துள்ளன. அவற்றுள் திருக்குறளில் வானியல் பற்றிய ஆய்வுகள் குறைவாகவே உள்ளன. இக்குறைபாட்டைப் போக்கிட வானியலின் ஒரு பகுதியான நிலவு மறைப்பு (சந்திர கிரகணம்) பற்றி ஆய்வு செய்வதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது. இக்கட்டுரையில் திருவள்ளுவர் குறிப்பிட்டுள்ள வானியல் செய்திகளுக்கு வலுச்சேர்க்கக்கூடிய சங்க இலக்கியச் சான்றுகளும் ஆங்காங்கே எடுத்தாளப்பட்டுள்ளன.

[26] இணைப் பேராசிரியர், அறிவியல்தமிழ் மற்றும் தமிழ்வளர்ச்சித் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் – 613010. gauind@rediffmail.com

**ஆய்விற்கான குறள்**

கண்டது மன்னும் ஒருநாள் அலர்மன்னும்
திங்களைப் பாம்புகொண் டற்று *(குறள்:1146)*

**கலைச்சொற்கள்**

கண்டது - தலைவனும், தலைவியும் அல்லது காதலனும் காதலியும் பார்த்துக் கொண்டது

மன்னும் - அசைச்சொல்

ஒரு நாள் - ஒரு நாள்

அலர் - ஊரார் தூற்றிப் பேசுதல்

திங்கள் - நிலவு (சந்திரன்)

பாம்பு - ராகு நிழற்கோள்

கொண்டற்று - மறைத்தது போல

*அலரிற் தோன்றும் காமத்து மிகுதி (கற்பியல் : 171)*

என்கிறார் தொல்காப்பியர்.

***அம்பல்*** – இது தலைவன் – தலைவி களவு பற்றி ஊரார் மறைமுகமாக அதாவது அரசல்புரசலாகப் பேசுதல் ஆகும். இது தொடக்க நிலை அலர் எனலாம்.

***அலர்*** – இது தலைவன் – தலைவி களவு பற்றி ஊரார் வெளிப்படையாகப் பேசுதல் ஆகும். இது அம்பலின் முற்றிய நிலை என்பர்.

திருக்குறளில் ***மன்னும்*** என்னும் அசைநிலைச் சொல் குறள் எண் 1164லிலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

திருக்குறளில் ***அற்று*** என்ற சொல் 22, 718, 913, 929, 931, 1008, 1020, 1058, 1304, 1308 ஆகிய பத்துக் குறள்களில் போலும், போன்றது, போல ஆகிய பொருள்களில் குறிப்பிடப்படுட்டுள்ளது.

திருக்குறளில் ***நாகம்*** எனக் குறிப்பிட்ட நாகப்பாம்பு பற்றி 763 ஆம் குறளிலும் ***பாம்பு*** என்று ஊர்வன உயிரியாக 1164 ஆம் குறளிலும் ராகு நிழற்கோள் பாம்பாகச் சித்திரிக்கப்பட்ட வகையில் பொதுவாக பாம்பு என 1146 ஆம் குறளிலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

**பொருள்**

(i) யான் காதலரைக் கண்ணுறப் பெற்றது ஒரு ஞான்றே அதினினாய அலர் அவ்வளவிற்றன்றித் திங்களைப் பாம்பு கொண்ட அலர் போன்று உலகெங்கும் பரந்தது. (பரிமேலழகர் உரை)

(ii) யான் கண்ணுற்றது ஒரு நாள்; அக்காட்சி திங்களைப் பாம்பு கொண்டாற்போல, எல்லாரானும் அறியப்பட்டு அலராக நின்றது. (மணக்குடவர் உரை)

(iii) நாங்கள் ஒருவரை ஒருவர் கண்டது ஒரே ஒரு நாளே; ஆனால் அதனால் உண்டாகிய அலர்ச்சொல்லோ நிலவைப் படர்நிழல் (பாம்பு) பற்றுவதுபோல் உலகறிந்தது ஆயிற்று. (மதுரை இளங்குமரனார்).

*திங்கள் (சந்திரன்)*

புவிக்கு மிக அண்மையில் இக்கோள் அமைந்து ஞாயிற்றிடமிருந்து ஒளியைப் பெற்றுப் புவிக்கு வழங்குகிறது. புவி பகலில் ஞாயிற்றிடமிருந்தும், இரவில் திங்களிடமிருந்தும் ஒளியைப் பெறுகிறது. ஏறக்குறைய 3,84,000 கி.மீ. தொலைவில் புவிக்கு மிக அருகில் இருக்கும் ஒரு துணைக்கோள் சந்திரனாகும். புவியிலிருந்து சந்திரனுக்கு ஏவூர்தியில் சென்றுவரச் சுமாராக 6 நாள்களாகும். சந்திரனின் சுற்றளவு 10,927 கி.மீ., பரப்பளவு, 37,943,000 ச.கி.மீ., விட்டம் 3746கி.மீ., எடை ,புவியின் எடையில் 1/8 பகுதி, கன அளவு, புவியின் கனஅளவில் 1/50 பகுதியாகும். சந்திரன் விண்மீன்களைப் பொறுத்துப் புவியை மேற்கிலிருந்து கிழக்காகச் சுற்றி வர 27 1/2 நாட்களாகும். இதைச் சந்திரனின் மீன்வழி மாதம் (Sidereal month of the moon) என்பர். இதிலிருந்து சந்திரன் நாளொன்றுக்கு $13.2^{0}$ மேற்கிலிருந்து கிழக்காகச் செல்கிறது எனக் கணக்கிட்டுள்ளனர். சூரியனைப் பொறுத்துச் சந்திரன் புவியைச் சுற்றிவர 29.5 நாட்களாகும். இதுவே சந்திரனின் சூரியவழி மாதம் (Synotic month - Lunation) ஆகும் என்பர் அறிஞர் பெருமக்கள். ( அறிவியல் களஞ்சியம், தொகுதி 9, பக்கம் 704 )

*அமாவாசை நிலவு வளரும் - அலர்தரு பக்கம் (இருள் உவா)*

*பௌர்ணமி - நிலவு தேயும் - வழியது பக்கம் (நிறைமதி உவா)*

**திங்கள் பிறையும் முழுமையும்**

ஞாயிறும், திங்களும் புவியிலிருந்து நோக்கும்போது ஒரே திசையில் நெட்டாங்கைப்(Longitude) பெறும் வகையில் ஒத்த தளத்தில் அமைந்துள்ளன. அப்போது புவியில் திங்கள் புலனாகாமையால், அந்த நாள் இருள்மதி நாள் எனப்படும். ஏறத்தாழ பதினைந்து நாள்களுக்குப் பின்னர் ஞாயிறும் திங்களும் $180^{0}$ நெட்டாங்கில் மாறுபடும்போது புவி ஞாயிறு, திங்கள் இவற்றிற்கு இடையில் வருவதால் அந்த நாள் முழுமதி நாள் (Full Moon Day) எனப்படும். இதனால் அடுத்தடுத்த முழுமதிக்கோ இருள்மதிக்கோ இடையிலான காலத்தை மாதம் எனலாம்.

இருள்மதிக்குப் பின்னர் மூன்றாம் நாள் மேற்குத் திசை வானில் ஞாயிறு மறைந்தவுடன் திங்கள் ஒரு சிறிய கோடு போல் தோன்றும். இதைப் பிறை என்றோ மூன்றாம் பிறை என்றோ வழங்குவர். நாளுக்கு நாள் பிறை வளர்ந்து முழுநிலவாக மாறி 14–15 நாட்கள் சென்ற பின்னர், கீழ்வானில் முழுமையாகக் காட்சியளிக்கும்.

**திங்களும் காலமும்**

நிலவைக் குறிக்க ஆங்கிலத்தில் வழங்கும் Moon என்னும் சொல் அளப்பவன் என்னும் வேர்ப்பொருள் உடையது. எனவே, காலத்தை அளப்பவன் என்னும் காரணப்பெயராக Moon அமைந்தது.

பழைய ஆங்கிலம் – Moon (மோனா)

லத்தீன் – Mensis (மென்ஸிஸ்)

கிரேக்கம்– Men(மென்)

Month (மாதம்) என்னும் சொல்லும் மதி என்னும் வேரின்று தோன்றியதே. தமிழில் திங்கள் என்னும் சொல் நிலவு,மாதம் என இருபொருள்படுவதும் குறிப்பிடத்தக்கது.

**வளர்பிறை**

சூரியன், சந்திரன், புவி இவை நேர்கோட்டு நிலையிலிருந்து மாறி சந்திரன் படிப்படியாகத் தன்னைத் தானே சுற்றிக்கொண்டு புவியையும் சுற்றுகையில் சூரியனின் ஒளி சந்திரனின் மேல் படிப்படியாகப் படும். சந்திரனின் இந்நிலைகளைப் புவியிலிருந்து நோக்குகையில் படிப்படியாகப் (Gradually) பிறை வடிவம் புலப்படும். வளரும் இப்பிறைவடிவத்தையே வளர்பிறை என்கிறோம்.

**தேய்பிறை**

அமாவாசை முதல் பௌர்ணமி வரை சந்திரன் படிப்படியாகப் பிறைகளாக வளர்ந்து 15 நாட்களில் முழுமையாகத் தெரியும். பௌர்ணமி முதல் அமாவாசை வரை அடுத்த 15 நாட்கள் சந்திரனின் முழுவட்ட நிலையிலிருந்து பிறையாகப் படிப்படியாகக் குறைந்துகொண்டே வந்து இறுதியில் இருண்டுவிடும். இதுவே தேய்பிறை எனப்படுகிறது.

'மெய் மூன்றாம் பிறை, பொய் பூரண சந்திரன்' என்றொரு பழமொழியும் உண்டு. இருள் மதியிலிருந்து முழுமதி வரை உள்ள காலம், வளர்பிறைக் காலம் அல்லது சுக்கில பட்சம் (Waxing Period) என்றும், முழு மதியிலிருந்து மீண்டும் குறைந்து கொண்டே வந்து 14–15 நாள் கழித்து இருள்மதியாகும் காலம் தேய்பிறைக் காலம் அல்லது கிருஷ்ணபட்சம் (Waning Period) என்றும் வழங்கப்படுகிறது

**சங்க இலக்கியத்தில் வளர்பிறை, தேய்பிறை– காலக்கணிப்பு**

பொதுவாக ஓர் இலக்கிய ஆசிரியர் தான் இயற்றும் படைப்பிற்குத் தன் முன்னோடிப் படைப்பாளர்களின் படைப்புகளையோ சமகாலத்தியப் படைப்புகளையோ நோக்குவது மரபு. அவ்வகையில் திருவள்ளுவரின் திங்கள், பாம்பு சொல்லாட்சிகள் சங்க இலக்கியங்களிலும் இடம்பெற்றிருப்பதும் நோக்கத்தக்கவை. சில எடுத்துக்காட்டுகள் பின்வருமாறு.

இருள்மதி நாளுக்குப் (அமாவாசை) பின்பு நிலவு வளர்கின்ற பருவம். வளர்பிறைப் பக்கம் அல்லது முற்பக்கம் எனப்படும். முழுமதி நாளுக்குப் (பௌர்ணமி) பின்னர் நிலவு தேய்கின்ற பருவம், தேய்பிறைப் பக்கம் அல்லது பிற்பக்கம் எனப்படும். நிலவின் இவ்விரு பருவங்களையும் சங்க இலக்கியங்கள் அலர்தரு பக்கம், வழியது பக்கம் எனக் குறிப்பிடுகின்றன. இருள்மதி நாள் 'இருள் உலா' என்றும், முழுமதி நாள் 'நிறைமதி உலா' என்றும் முறையே பயிலப்பட்டுள்ளன.

*ஆம்நாள் நிறைமதி அலர்தரு பக்கம் போல்*
*நாளின், நாளின் நளிவரைச் சிலம்புதொட்டு*
*நிலவுப் பரந்தாங்கு நீர்நிலம் பரப்பி*
*உலகு பயம்பகர ஓம்பு பெரும் பக்கம்*
*வழியது பக்கத்து அமரர் உண்டி*
*மதிநிறை அழிவதின் வரவு சுருங்க*
*எண்மதி நிறையுவா இருள்மதி போல (பரி.11:31-37)*

திங்கள் தேய்வதும், வளர்வதும் கண்ணுக்கு நேரே நிகழும் காட்சிகளாக உள்ளன. தேய்ந்து வளர்தல் என்பது காலம் தவறாது நிகழ்வதாலும், பிற விண்மீன்களுக்கோ கோள்களுக்கோ இச்சிறப்பு நிகழ்வு அமையாத பெருமையாலும் திங்களைக் காலம் அளக்கும் வான்பொருளாகப் தமிழர்கள் கருதுகின்றனர். இதன் அடிப்படையிலேயே திங்கள் கொள்கைகளும் நம்பிக்கைகளும் பல்கிப் பெருகின.

*தேய்தல் உண்மையும் பெருகல் உண்மையும்*
*மாய்தல் உண்மையும் பிறத்தல் உண்மையும் (புறம்.- 27)*

தேய்தல் தேய்பிறையைக் (அமர பக்கம்) குறிக்கும்; பெருகல் வளர்பிறையைக் (பூர்வபக்கம்) குறிக்கும். மாய்தல் ஞாயிறு மறையும் நேரத்தையும், பிறத்தல் ஞாயிறு தோன்றும் நேரத்தையும் புலப்படுத்தும். இதனால் சங்கத் தமிழர்கள் தேய்பிறை, வளர்பிறை இவற்றின் அடிப்படையில் காலத்தைக் கணித்தனர் என்பதை அறியலாம்.

**சந்திர கிரகணம் –அறிவியல் பின்புலம்**

திங்களுடன் இராகுவோ கேதுவோ, சமகோணத்தில் அமையும்போது திங்கள் மறைப்புத் (சந்திர கிரகணம் – Lunar Eclipse) தோன்றுகிறது. இராகுவோ, கேதுவோ ஞாயிற்றுடன் சமகோணத்தில் இருக்கும் நிலையில் ஞாயிறு மறைப்பு (சூரிய கிரகணம் – Solar Eclipse) நிகழ்கிறது. ஞாயிற்றையும் திங்களையும்

நெருங்கும்போது முறையே இராகு, கேது ஆகிய நிழற்கோள்களின் நிழல்கள் மறைப்பதால் புவியில் இருள் பிறக்கிறது.

*இராகு – கேது : பாம்பு*

பாம்பு தலை (கேது) மற்றும் பாம்பு உடல் (ராகு) இவற்றோடு புராணத்தில் தொடர்புபடுத்தப்பட்டுள்ளன. ராகு, கேது, இவற்றில் சந்திரன் மறைக்கப்படுவதையே-திருவள்ளுவர் பாம்பு கொண்டதுபோல் என்கிறார்.

**சூரிய கிரகணமும் சந்திர கிரகணமும்**

| | சூரிய கிரகணம் (சூரியன் மறைப்பு) | சந்திர கிரகணம் (சந்திரன் மறைப்பு) |
|---|---|---|
| 1 | உலகில் குறிப்பிட்ட சில பகுதிகளிலிருந்து மட்டுமே பார்க்க முடியும். | புவியில் இரவு நேரமாய் இருக்கும் எப்பகுதியிலிருந்தும் பார்க்கலாம். |
| 2 | சில நிமிடங்கள் மட்டுமே நீடிக்கும். | சில மணி நேரங்கள் நீடிக்கும். |
| 3 | வெறும் கண்களால் மட்டும் பார்க்க முடியாது, பாதுகாப்புக் கருவிகளைப் பயன்படுத்தியே பார்க்க முடியும். | எவ்வித பாதுகாப்புக் கருவியும் இன்றி வெறும் கண்களால் பார்க்கலாம். |

**சங்க இலக்கியத்தில் சந்திர கிரகணம்**

சங்ககாலக் கவிதைகள் முதல் இக்காலப் புனைவுகள் வரை பெண்கள் தொடர்புடைய கருத்துக்களில் திங்கள், சந்திரன், மதி போன்றவற்றை மையப்படுத்துவது மரபாக இருந்து வருகிறது. இவ்வடிப்படையில் தலைவன்–தலைவி சந்திப்பிலும் திருக்குறளில் திங்கள் குறிப்பிடப்பட்டுள்ளது.

சங்க இலக்கியங்கள் ராகு நிழற்கோளைக் கரும்பாம்பாகவும்,கேது நிழற்கோளைச் செம்பாம்பாகவும் குறிப்பிடுகின்றன. பாம்பு நிலவினை விழுங்குவதால், மறைப்பதால் திங்கள் மறைப்பு ஏற்படுவதாகச் சங்கப் புலவர்கள் குறிப்பிட்டுள்ளது நோக்கத்தக்கது.

எடுத்துக்காட்டுகள்:

*பகல்எரி சுடரின் மேனி சாயவும்*
*பாம்புஊர் மதியின் நுதல்ஒளி கரப்பவும்* *(நற்றிணை: 128.1–2)*

*அகல்இரு விசும்பின் அரவும் குறைபடுத்த*
*பசுங்கதிர் மதியத்து அகல்நிலாப் போல* *(நற்றிணை: 377.6–7)*

*ஐவாய் அரவின் இடைப்பட்டு நைவாரா?*

*மைஇல் மதியின் விளங்கும் முகத்தாரை (கலித்தொகை : 26.13–14)*

பாம்பு விழுங்கிய திங்களைப் போன்று ஒளி இழந்த நெற்றியுடன் பகலும் இரவும் வருந்திப் பிரிவுத்துயரில் ஆழ்ந்திருக்கும் தலைவி ஒருத்தியைப் பற்றி அகநானூறு (313) குறிப்பிடுவதும் நோக்கத்தக்கது.

பழந்தமிழர்கள் சந்திரன், சூரியன், பூமி ஆகிய மூன்றும் நேர்கோட்டில் வரும்போது மறைப்பு (கிரகணம்) உண்டாகிறது என்ற அறிவியல் உண்மையை அறிந்திருக்கவில்லை. ஆனால், கிரகணம் ஏற்படுகின்ற நேரத்தில் வானில் ஏற்படும் மாற்றங்களைக் கவனித்துள்ளனர். வானில் இருள் சூழ்ந்திருந்ததைக் கண்டு பாம்பு நிலவினை விழுங்குவதாகக் கூறியுள்ளனர்.

## முடிவுரை

சந்திர கிரகணம், சூரிய கிரகணம் இந்நிகழ்வுகளை அறிவியல் அறிஞர்கள் கண்டுபிடிப்பதற்கு முன்னரே திருவள்ளுவர் குறளில் குறிப்பிட்டுள்ளதால் திருவள்ளுவரும் ஒரு வானியல் வல்லுநர் என்றால் அது மிகையாகாது. இக்கால வானியலாளருக்குத் திருவள்ளுவர் முன்னோடி என்பதைத் தன் குறள்வழி மெய்ப்பித்துள்ளார்.

## *துணைநின்றவை*


I. **நூல்கள்**

- இளங்குமரனார் ( உரை. ), திருக்குறள், வள்ளலார் பதிப்பகம், வடலூர், 2017.
- சிவபெருமான் அ., தமிழரின் வானியல் திறன், திருவருள் நிலைய வெளியீட்டகம், தென்னார்க்காடு மாவட்டம், 1993.
- சுப்பிரமணியன் ச.வே., சங்க இலக்கியம் மூலம் முழுவதும், மணிவாசகர் பதிப்பகம் ,சென்னை, 2006.
- வரதராசன், மு பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை, பாரி நிலையம், சென்னை, 1964.
- ……., , திருக்குறள் பரிமேலழகர் உரை, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2003.
- ………, திருக்குறள் மணக்குடவர் உரை, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2003.

II. **கலைக்களஞ்சியம்**

- பதிப்புக் குழு, அறிவியல் களஞ்சியம், தொகுதி–7, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1995.